11th
SEPTEMBER
2024

www.uthayam.lk

# உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 01 | இதழ்: 47 | பக்கங்கள் - 08 | editor.uthayam@gmail.com

## எதிர்வரும் ஞாயிறன்று புலமைப் பரிசில் பரீட்சை

### பயிற்சி வகுப்புகள் செயலமர்வுகளுக்கு தடை

ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பான அனைத்து மேலதிக வகுப்புகள், விரிவுரைகள்,

08ம் பக்கம்பார்க்க...

# உயிர்த்த ஞாயிறு சூத்திரதாரிகளுக்கு தராதரம் பார்க்காது தண்டனை

தகுதி தராதரம் பாராது உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பிரதான சூத்திரதாரிக்கு உரிய தண்டனையைப் பெற்றுக் கொடுப்போம்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மல்கம் ரஞ்சித் ஆண்டகையிடம் வாக்குறுதி.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும், பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகைக்குமிடையிலான

விசேட சந்திப்பொன்று இன்று (11) காலை கொழும்பு பேராயர் உத்தியோகபூர்வ இல்லத்தில் இடம்பெற்றது. உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு நீதி நிலைநாட்டப்படும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இங்கு

02ம் பக்கம்பார்க்க...



## கிளிநொச்சியில் முஸ்லிம்களின் காணிகள் அபகரிப்பு!

### நீதி கோரி கதறும் பெண்

### கண்ணீர் விட்டு கதறும் முஸ்லிம் தாய்




(பரீட் இக்பால்)

கிளிநொச்சியில் பறிபோகும் நிலையில் 50 வருடம் வாழ்ந்த இடம் வடக்கிலிருந்து முஸ்லிம்கள் பலவந்தமாக விடுதலை புலிகளினால் ஒட்டுமொத்த வடமாகாண முஸ்லிம்களும்

02ம் பக்கம்பார்க்க...

## ரணில் எம்மோடு வேஷப் ஆக வந்தாலும் மத்திய வங்கி மோஷடிக்கு நடவடிக்கை

### - அனுர குமார திட்டவட்டம் -



எமது எதிரி எமக்கெதிராக என்னதான் செய்தாலும் எமது வெற்றியை நிறுத்திவிட முடியாது.

இந்த செப்டெம்பர் 21 ஆந் திகதி  தேசிய மக்கள் சக்தியால் வெற்றிபெற இயலுமென எம்மனைவருக்கும் பாரிய நம்பிக்கை இருக்கின்றது. தற்போது எமது எதிர்த்தரப்பினர் அவர்கள் ஒருபோதுமே எதிர்பார்த்திராத தலைவிதியை எதிர்நோக்கி இருக்கிறார்கள்.

03ம் பக்கம்பார்க்க...

## சீதா அரம்பேவலவுக்கு இராஜாங்க அமைச்சு



மகளிர் மற்றும் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சராக சீதா அரம்பேபொலவை நியமித்தார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

இந்த நியமனம் ஜனாதிபதி செயலகத்தில் வழங்கப் பட்டது.

## திசைகாட்டியின் பொருளாதார கொள்கையை தெளிவுபடுத்துங்கள்

### அனுரவிடம் ரணில் வேண்டுகோள்



திசைகாட்டியின் பொருளாதாரக் கொள்கை ஏற்றுமதிப் பொருளாதாரமா அல்லது இறக்குமதிப் பொருளாதாரமா என்று கேட்டதற்குப் பதிலளிக்காத அநுர திஸாநாயக்க தன்னை விவாதத்திற்கு அழைக்கிறார். தன்னுடன் விவாதத்திற்கு வர முன்னர் அநுர, சுனில்

02ம் பக்கம்பார்க்க...



## நாட்டை கட்டியெழுப்பி சிறந்த வாழ்வாதாரத்தை உருவாக்குவேன்

### நாமல் ராஜபக்ஷ உறுதி!!

(பீ.எம் முக்தார்)

கிராமங்களில் அபிவிருத்தி திட்டங்களை சிறப்பாக முன்னெடுத்துச் செல்வதுடன் மக்கள் கைகளில் பணம் சென்றடையும் விதமாக பல்வேறு

08ம் பக்கம்பார்க்க...




அமானா வங்கியில்
வாகன நிதியுதவி

உங்கள் வாகனத்துக்குரிய சாவியை
மிகவும் குறைவான மாதாந்த தவணைக்கொடுப்பனவுகளில் பெற்றுக்கொள்ளுங்கள்

ரூ. 2,085/-
ரூ.100,000க்கு வாடகை*

- மிகக்குறைந்த மாதாந்த தவணைக்கட்டணம்
- 7 ஆண்டுகள் வரையான மீள்செலுத்தும் காலம்
- 24 மணித்தியாலத்திற்குள் அங்கீகாரம்

விண்ணப்பிக்க ஸ்கேன் செய்யவும்

நிதிமுறைகளும் நிபந்தனைகளும் பொருந்தும்*

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk

இது உங்கள் வங்கி Amãna Bank

## கிளிநொச்சியில்...

**(முன் பக்கத் தொடர்ச்சி)**

*குறுகிய மணித்துளியில் விரட்டி அடிக்கப்பட்ட சம்பவம் உலகம் அறிந்த விடயம்.*

*34 வருடங்கள் கடந்தும் விரட்டி அடிக்கப்பட்ட முஸ்லிம்களின் காணிகள் சிலரால் அபகரிக்கப்பட்டதால் கிளிநொச்சி பிரதான வீதி கந்தசாமி கோயில் முன்பாக இருக்கக்கூடிய முஸ்லிம்களுக்கு சொந்தமான காணிகளில் சட்டவிரோதமான முறையில் அவர்களினால் அபகரிக்கப்பட்டுள்ளது. முஸ்லிம்கள் இனச்சுத்திகரிப்பு செய்யப்பட்டு 34 வருடம் கடந்தும் அவர்கள் புத்தளம் போன்ற பகுதிகளில் அகதிகளாக குடிசைகளில் வாழ்ந்து வருகின்றார்கள். இவர்கள் பல தடவை மாவட்டச் செயலகம் பிரதேச செயலகம் போன்றவற்றுக்கு பல முறைப்பாடுகளை கொடுத்தும் அவர்களுக்கான தீர்வை அவர்களினால் பெற்றுக் கொடுக்க முடியவில்லை 09ஃ09ஃ2024 திங்கட்கிழமை காலை ஊடக சந்திப்பு இடம் பெற்றது. பாதிக்கப்பட்டவர்கள் கண்ணீரோடு தங்களின் அவல நிலைகளை பத்திரிகையாளர்களுக்கு சர்வதேச மனித உரிமைகள் பணிப்பாளர் (யாழ் முஸ்லிம் வட்டாரம்) ஆரிப் அப்துல் பரீட் எடுத்துரைத்தார். சகல ஆவணங்கள் இருந்தும் அவர்களுடைய சொந்த இடத்துக்கு செல்ல முடியாத அவல நிலையை கண்ணீரோடு தெரிவித்தார்கள். இந்த நிகழ்வில் சர்வதேச மனித உரிமை அமைப்பின் செயல்பாட்டாளர்களும் கலந்து கொண்டார்கள். இவர்களுக்கான நீதியை பெற்றுக் கொடுக்க வேண்டிய பொறுப்பு மாவட்டச் செயலாளர், பிரதேச செயலாளர் போன்றவர்கள் இந்த ஏழைகளுக்கான நீதியை பெற்றுக் கொடுக்க வேண்டும்.*

## உயிர்த்த...

**(முன் பக்கத் தொடர்ச்சி)**

வாக்குறுதியளித்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணங்களைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் நியமிக்கப்படுகின்ற நீதிமன்ற கட்டமைப்புக்கு தாம் தோள் கொடுப்பதாகவும், நீதிமன்ற கட்டமைப்பை மேலும் உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும், இதற்காக மேற்கொள்ள வேண்டிய சட்ட ரீதியான நடவடிக்கைகளை முறையாக செயல்படுத்துவோம் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இங்கு வாக்குறுதியளித்தார்.

அவ்வாறே, உயர்த்து ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணங்களை வழங்குவதோடு, இதன் பிரதான சூத்திரதாரிக்கு தகுதி தராதரம் பாராது தண்டனையைப் பெற்றுக் கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுப்பேன் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் இங்கு மேலும் சுட்டிக்காட்டினார்.

## திசைகாட்டியின்...

**(முன் பக்கத் தொடர்ச்சி)**

ஹந்துன்நெத்தி, ஹர்ஷன சூரியப்பெரும ஆகியோர் தனியாக விவாதம் நடத்தி நாட்டுக்குத் தமது சரியான பொருளாதாரக் கொள்கையைச் கூற வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

தான் முன்னர் குறிப்பிட்டதுபோல், அநுரவும், தானும் சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரும் பங்கேற்கும் காணொளி உரையாடலுக்கு நேரத்தை ஒதுக்க முடியும் என்று தெரிவித்த ஜனாதிபதி, யாருக்கும் பேச இடமளிக்காமல் பேசக்கூடிய சஜித்தையும் இதற்கு அழைக்கலாம் எனவும் சுட்டிக்காட்டினார்.

குருநாகல் அஸ்லியா கோல்டன் கிரசென்டா ஹோட்டலில் நேற்று (10) பிற்பகல் நடைபெற்ற குருநாகல் மாவட்ட அறிஞர்கள் மற்றும் வர்த்தக சமூகத்தினருடான கூட்டத்தில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

மேலும், 8,900 பில்லியன் ரூபாய் செலவும், 4,900 பில்லியன் ரூபாய் வருமானமும், 4,000 பில்லியன் ரூபாய் பற்றாக்குறையும் கொண்ட நாட்டின் பொருளாதாரத்தை அழிக்கும் கொள்கைப் பிரகடனத்தை அனுரகுமார திஸாநாயக்க ஏன் தனது விஞ்ஞாபனத்தில் வெளியிட்டுள்ளார் என்று கேள்வி எழுப்பிய ஜனாதிபதி, மேடைகளில் பொய்யாகக் கூச்சல் எழுப்பாமல் தமது சரியான பொருளாதாரக் கொள்கையை நாட்டுக்கு முன்வைக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க,

“குருநாகல் மாவட்டத்துடன் எனக்கு நீண்டகாலப் பிணைப்பு இருக்கிறது. 1978 ஆம் ஆண்டு கம்பஹாவில் ஆரம்பிக்கப்பட்ட அபிவிருத்தியை குருநாகல் வரை கொண்டு வருகின்றோம். அந்தப் விரைவில் பணிகள் ஆரம்பிக்கப்படும்.

இரண்டு வருடங்களுக்கு முன்பு எனக்கு என்ன நடந்தது என இங்கு கேள்வி எழுப்பப்பட்டது. சஜித்துக்கும் அநுரவுக்கும் என்ன நடந்தது என்று நான் கேட்டிருக்க வேண்டும். உணவு, மருந்து, எரிபொருள், எரிவாயு, உரம் இன்றி மக்கள் தவிக்கும்போது சஜித்துக்கும் அநுரவுக்கும் மக்களுக்காக வருத்தமும் வேதனையும் ஏற்படவில்லையா? மக்களுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்று நினைக்கவில்லையா? அவர்கள் அப்படிச் செய்திருந்தால் இன்று நான் இங்கு இருந்திருக்க மாட்டேன். அவர்கள் தமது பொறுப்புக்களை சரியாக நிறைவேற்றாத காரணத்தினால்தான், ஒரேயொரு பாராளுமன்ற உறுப்பினராக இருந்து நாட்டின் ஜனாதிபதிப் பொறுப்பை ஏற்க நேர்ந்தது.

எனக்குப் பல அரசியல் கட்சிகளின் ஆதரவு கிடைத்தது. அந்த ஆதரவுடன் நாட்டின் பொருளாதாரத்தை முன்னோக்கிக் கொண்டு வந்தேன். முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச பதவி விலகும்போது சபாநாயகரை தற்காலிக ஜனாதிபதியாக நியமித்து தேர்தலுக்குச் சென்றிருந்தால் என்ன நடந்திருக்கும்? அதிகார இடைவெளியை உருவாக்கியிருந்தால் இன்று வங்கதேசம் இருக்கும் நிலையில் நாமும் இருக்க வேண்டியிருக்கும்.

நாட்டின் பொறுப்பை ஏற்று சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவுடன் நாட்டின் பொருளாதாரத்தை முன்னோக்கிக் கொண்டு வந்தோம். அடுத்த ஆண்டு, மக்களின் வாழ்க்கைச் சுமையை குறைப்பதற்கான முயற்சிகளை எடுப்போம். நாடு முழுவதும் முதலீட்டு வலயங்களை உருவாக்குவதோடு, விவசாயத்தை நவீனமயமாக்கும் திட்டத்தை செயல்படுத்த ஆரம்பித்திருக்கிறோம். இளையோருக்கான தொழில் வாய்ப்புகளும் உருவாக்கப்பட்டுள்ளன

சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தங்களின்படி நாம் செயல்பட்டால், கடன் பெறுவதற்கான தேவைகள் குறைவாகவே இருக்கும். அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டத்தின்படி எதிர்காலத்தில் இந்நாட்டின் செலவு 6,800 பில்லியன் ரூபாயாகவும், வருமானம் 5,100 பில்லியன் ரூபாயாகவும் காணப்படுவதோடு, இடைவெளி 1700 பில்லியன் ரூபாயாகக் காணப்படும். இது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5.2 சதவீதமாகும். எனவே, இந்த இடைவெளியை நிரப்பும் இயலுமையும் எமக்கு உள்ளது.

ஆனால் ஜேவிபி தருவதாக கூறும் நிவாரணங்களை வழங்கினால் செலவு 8,900 கோடி ரூபாயாகவும், வருமானம் 4,900 பில்லியன் ரூபாயாகவும் காணப்படும். அத்தோடு வரிக் குறைப்பு தொடர்பிலும் பேசுகின்றனர். அதன்படி வரவு செலவுத் திட்ட இடைவெளி 4000 பில்லியன் ரூபாயாக அமையும். பின்னர் பட்ஜெட் இடைவெளி மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 11.9 சதவீதமாக காணப்படும். இவ்வாறான பொருளாதாரத்தை முன்னோக்கிக் கொண்டுச் செல்ல முடியுமா என்பது கேள்விக்குறியாகும்.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை மீறி சந்தையில் பணம் வாங்கினால், வட்டி 25% ஆக இருக்கும். இப்படியான மாற்றத்தையா அவர்கள் எதிர்பார்க்கின்றனர்?

அதனால் டொலரின் பெறுமதி 500 ரூபாயாக உயர்வடையும். சர்வதேச நாணய நிதியத்துடனான நிபந்தனைகளை மீறிவிட்டால் அவர்களின் ஆதரவு இரத்தாகும். அதனால் நாட்டின் பொருளாதாரம் சரிவை நோக்கி நகரும்.

நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப, ஏற்றுமதிப் பொருளாதாரத்திற்குச் செல்ல வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும். அண்மையில் அனுரகுமார திஸாநாயக்கவும் களனி பிரதேசத்தில் ஏற்றுமதி பொருளாதாரத்தையும் நடைமுறைப்படுத்துவதாக கூறியிருந்தார்.






## ரணில்..

**(முன் பக்கத் தொடர்ச்சி)**

அவர்கள் அவர்களுக்கிடையில் மாத்திரம் அதிகாரத்தை கைமாற்றிக்கொள்வதை நீண்டகாலமாக செய்துவர முடியுமென நினைத்தார்கள். எனினும் எதிர்வரும் செப்டெம்பர் 21 ஆந் திகதி நிச்சயமாக அந்த மரபுரீதியான அதிகாரப் பரிமாற்றம் முற்றுப்பெறும். தற்போது அவர்கள் மிகவும் அசிங்கமான, அவலட்சணமான. காட்டுமிராண்டித்தனமான அரசியலில் பிரவேசித்துள்ளார்கள். பொய்கள், சேறுபூசல்கள, குறைகூறல்கள், அத்துடன் குரோதம், பகைமை என்பவற்றை எமக்கெதிரா பரப்பி வருகிறார்கள். எதிர்வரும் சில தினங்களில் மேலும் அதனை தீவிரப்படுத்துவார்களென நினைக்கிறோம். நாங்கள் ஒரேயொரு விடயத்தைதான் கூறவேண்டியுள்ளது. அது எமது எதிரி எமக்கெதிராக என்னதான் செய்தாலும் எமது வெற்றியை நிறுத்திவிட முடியாது என்பதாகும். நான் முஸ்லிம் மக்களுக்கு எதிராக ஒரு கூற்றினை வெளியிட்டதாக அண்மையில் பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் ஒரு கூற்றினை வெளியிட்டார். அவர் தனது கூற்றினை சரி செய்து கவலையை தெரிவிக்க அவருக்கு வாய்ப்பு இருக்கிறது. அவ்வாறு செய்யாவிட்டால் நாங்கள் வழக்கு போடுவோம். நாங்கள் வந்ததும் கண்டி பெரஹெராவை நிறுத்திவிடுவதாக திஸ்ஸ அத்தநாயக்க கூறியிருந்தார். இப்போது அவர்கள் மீண்டும் இனவாதத்தையும் மதவாதத்தையும் தூண்டிவிட முயற்சி செய்கிறார்கள்.

திஸ்ஸ அத்தநாயக்க கவலையை தெரிவித்தாலும் நாங்கள் அவருக்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வோம். அவர் போலி ஆவணம் புனைவதில் கிண்ணத்தை வென்றெடுத்தவர். அவ்வாறு செய்து விளக்கமறியலில் இருந்த ஒருவராவார். இற்றைக்கு சில தினங்களுக்கு முன்னர் எங்களுடைய தோழர் வசந்தவை கைது செய்யுமாறு பணிப்புரை விடுக்கப்பட்டதாக பாரிய சேறுபூசினார். அது பற்றியும் கட்டாயமாக அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்போம்.

இந்த அசிங்கமான அரசியல் விளையாட்டை இப்போதாவது நிறுத்திக் கொள்ள வேண்டும். நாங்கள் இந்த நிலைமைக்கு எதிராக எடுக்க வேண்டிய எல்லா நடவடிக்கைகளையும் எடுப்போம்.

ரணில் விக்கிரமசிங்க ”எனது நண்பர் அநுர, எனது கூட்டாளி” எனக்கூறிக் கொண்டிருப்பதை நான் கண்டேன். அவர் ”ஷேப் ஆகவே வருகிறார்.” நண்பன் எனக்கூறிக்கொண்டு எவ்வளவு தான் ஷேப் ஆக வந்தாலும் எமது ஆட்சியின் கீழ் மத்திய வங்கி மோசடிக்கு எதிராக அவசியமான சட்ட நடவடிக்கைகளை எடுத்தே தீருவோம். கடந்த காலத்தில் அவர் பார் லைசன் வழங்கியமை தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ”கூட்டாளி”, ”கூட்டாளி” எனக்கூறிக்கொண்டு எவ்வளவு தான் எங்கள் பின்னால் வந்தாலும் எல்.ஆர்.சி. இன் காணிகளை பகிர்ந்தளித்த விதம் பற்றி நாங்கள் கட்டாயமாக விசாரணைகளை மேற்கொள்வோம். அதைபோலவே அவர் எமது நாட்டின் மோசடிப்பேர்வழிகளை பாதுகாக்க மேற்கொள்கின்ற முயற்சிகள் பற்றியும் நாங்கள் கட்டாயமாக விசாரணைகளை மேற்கொள்வோம். ரணில், செப்டெம்பர் 21 ஆம் திகதிக்கு பின்னர் உங்களுடைய கூட்டாளியை பற்றி விளங்கிக் கொள்வீர்.

எமது நாட்டின் இளைஞர் தலைமுறையினர் நீண்டகாலமாக சமூக மாற்றமொன்றுக்காக மல்லுக்கட்டினார்கள். சிலவேளைகளில் போராளிகளாகவும் சிலவேளைகளில் கருத்தியல் சார்ந்தவர்களாகவும் மல்லுக்கட்டினார்கள். எனினும் இறுதி வெற்றியை பெற்றுக்கொள்ள தவறினார்கள். நீங்கள் புரிந்த இந்த போராட்டத்திற்குள் இருந்த ஒவ்வொரு எதிர்பார்ப்பையும் குறிக்கோளையும் ஈடேற்றுகின்ற பொறுப்பினை செப்டெம்பர் 21 ஆம் திகதிக்கு பின்னர் நாங்கள் ஏற்றுக்கொள்வோம். எமது நாட்டின் அரசியலுக்கு வருவதற்குள்ள கதவுகளை பழைய ஆட்சியாளர்கள் மூடியிருந்தார்கள். ஆதனங்களை ஒரு பரம்பரையிலிருந்து மற்றொரு பரம்பரைக்கு கையளிப்பதைப்போல் எமது நாட்டின் அரசியலும் ஒரு பரம்பரையிலிருந்து அடுத்த பரம்பரையை நோக்கியே பாய்ந்து சென்றது. அந்த பரம்பரையினரின் அரசியல் பற்றி இளைஞர் தலைமுறையினர் வெறுப்பையும் அருவருப்பையுமே கொண்டிருக்கிறார்கள். புதிய பரம்பரைக்கு அரசியலை ஒரு கௌரவமான இடமாகவும் பெறுமதியுள்ள இடமாகவும் எடுத்துக்காட்ட அவசியமான மாற்றத்தை தேசிய மக்கள் சக்தியை சேர்ந்த நாங்கள் செய்து காட்டுவோம்.

இந்த நாட்டின் தேசிய அரசியல் நான்கு அல்லது ஐந்து குடும்பங்களின் கைகளிலேயே குவிந்துள்ளது.

சஜித் கூறுகின்ற விகாரமடைந்த விடங்களை நோக்கும்போது அவர் ஒரு பிரதேச சபை உறுப்பினராவதற்கான தகைமையையேனும் கொண்டிருக்கிறாரா என நீங்களே சிந்தித்து பாருங்கள். தகப்பன் ஜனாதிபதி இருந்தார் என்ற ஒரே காரணத்திற்காகவே அவர் ஜனாதிபதி வேட்பாளராக மாறியிருக்கிறார். இந்த நாட்டின் தேசிய அரசியல் நான்கு அல்லது ஐந்து குடும்பங்களின் கைகளிலேயே குவிந்துள்ளது. உங்கள் மாவட்டத்தில் உங்கள் தேர்தல் தொகுதியில் மாத்திரமல்ல பிரதேச சபை ஆளுகை பிரதேசத்தின் அரசியல் நிலைமையும் அதுவல்லவா? ஒரு சில குடும்பங்கள் இருக்கின்றன தகப்பன் பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவம் செய்கிறார். மூத்த மகன் மாகாண சபையை பிரதிநிதித்துவம் செய்கிறார். சின்ன மகன் பிரதேச சபையை பிரதிநிதித்துவம் செய்கிறார். அரசியல் குடும்ப படிக்கட்டு வரிசையில் வைத்ததுபோல். அப்பா ஒரு படிக்கட்டிலிருந்து விலகும்போது மகன் அந்த படிக்கட்டில் ஏறுகிறார். இந்த பரம்பரைவழி அரசியல் குடும்பங்கள் எமது நாட்டுக்கு பாரிய அழிவினை ஏற்படுத்தியுள்ளன. இந்த குடும்பத் தலைமுறையினருக்கிடையில் கைமாறுகின்ற அரசியல் பெட்டனை தற்காலிகமாக நாங்கள் கையிலெடுத்து இளைஞர்களாகிய உங்களின் கைகளில் ஒப்படைப்பதை நாங்கள் ஒரு பொறுப்பாக கையிலெடுத்திருக்கிறோம்.

எமது வறிய மற்றும் நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த இளைஞர் தலைமுறையினர் கரைசேர்வதற்குள்ள ஒரே பாதை கல்வியாகும்

அந்த அரசியல் பெட்டனை நாங்கள் ஒரு பரம்பரையிடமிருந்து இன்னொரு பரம்பரைக்கு ஒப்படைக்க மாட்டோம். அதைப்போலவே கிடைக்கின்ற இந்த பெட்டனை உயிர் பிரியும்வரை எங்களுடைய கைகளில் வைத்துக்கொள்ளவும் மாட்டோம். நாங்கள் அதனை ஒரு குறுகிய காலத்திற்கே வைத்திருப்போம். எங்களுடைய பொறுப்பினை ஈடேற்றிய பின்னர் நாங்கள் அதனை நாட்டின் இளைஞர் தலைமுறையினரிடம் ஒப்படைத்து நீங்கள் நாட்டை ஆட்சி செய்கின்ற விதத்தை நிம்மதியாக பார்த்துக்கொண்டிருப்போம். நாங்கள் பேராசைக்காரர்கள் அல்ல. கைவிட பழகிய மனிதர்கள். செப்டெம்பர் 21 ஆம் திகதி இடம்பெறுவது வெறுமனே அரசியல் கைமாறுதல் அல்ல. இதுவரை எமது நாட்டுக்கு உரித்தாக்கிக் கொடுத்திருந்த அயோக்கியமான அரசியலுக்குப் பதிலாக முற்றாகவே நிலைமாற்ற யுகமொன்றுக்கு ஆற்றுப்படுத்துகின்ற அரசியலை செப்டெம்பர் 21 ஆம் திகதி உருவாக்குவோம். அதனாலேயே நீங்கள் எங்களுடன் இந்த சில நாட்களில் இணைந்து செயற்பட வேண்டும். எமது வறிய மற்றும் நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த இளைஞர் தலைமுறையினர் கரைசேர்வதற்குள்ள ஒரே பாதை கல்வியாகும். எமது நாட்டில் இலவசக் கல்வி இருந்திராவிட்டால் தனிப்பட்ட முறையில் நானும் நீங்களும் இந்த இடத்தில் இல்லாதிருந்திருக்கலாம். தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியின் கீழ் கல்வியில் மிகப்பெரிய மாற்றத்தை இந்த நாட்டின் இளைஞர் தலைமுறையினர் மற்றும் பிள்ளைகளுக்காக நாங்கள் ஏற்படுத்துவோம்.

மிகவும் குறுகிய வரையறைக்குள் தடுத்து வைக்கப்பட்டுள்ள எமது நாட்டின் விளையாட்டுத்துறையை நாங்கள் உங்களுக்கு ஆரோக்கியத்தையும் மகிழ்ச்சியையும் புத்துணர்ச்சியையும் கொண்டு வருகின்ற துறையாக மாற்றுவோம். சுற்றுலாத் தொழிற்துறையை நாட்டுக்கு வருமானம் கொண்டுவருகின்ற மற்றும் தொழில்களை பிறப்பிக்கின்ற முன்னேற்றமடைந்த தொழிற்துறையாக மாற்றியமைப்போம். இந்த நாட்டை எல்லா பக்கங்களிலும் சுத்தம் செய்து உங்களின் கனவுகளை நனவாக்குகின்ற அழகான வாழ்க்கையை அனுபவிக்க உங்களுக்கு கிடைக்கின்ற வளமான இலங்கையை தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியின் கீழ் நாங்கள் கட்டியெழுப்புவோம்.







www.uthayam.lk
உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்
2024 SEPTEMBER 11 -WEDNESDAY
WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

# உலவும் போலி செய்திகள்தீர் விசாரித்து முடிவெடுங்கள்

ஜனாதிபதி தேர்தலுக்கு இன்னும் 14 நாட்களே உள்ள நிலையில் தற்போது தேர்தல் பிரச்சாரங்கள் மும்முரம் அடைந்துள்ளன.

பொதுக் கூட்டங்கள், கலந்துரையாடல்கள், நேரடி சந்திப்புகள் மற்றும் பலவிதமான சமூக ஊடகங்களை பயன்படுத்தியும் பிரச்சாரங்கள் மும்முரமாக மேற்கொள்ளப்படுகின்றன. சமூக ஊடகங்கள் விரைவாக மக்களை அடைவதனால் அபேட்சகர்களின் ஆதரவாளர்கள் சமூக ஊடகங்களை பயன்படுத்துவதில் கூடுதலான ஈடுபாட்டை காட்டுகின்றனர். இந்நிலையில் சமூக ஊடகங்களை பயன்படுத்தி போலி பிரச்சாரங்களை மேற்கொள்ளப்படுவதையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. சில தினங்களுக்கு முன் சர்ச்சைக்குரிய ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக பேராசிரியர் மெத்திகா விதானகே ஐக்கிய மக்கள் சக்தியின் அபேட்சகர் சஜித் பிரேமதாசவுடன் இணைந்துள்ளதாக இருவரது புகைப்படங்களையுமிட்டு செய்திகள் வெளியிடப்பட்டிருந்தன. குறித்த புகைப்படத்தில் இருவரும் கைகுலுக்குவது போன்ற படங்கள் இணைக்கப்பட்டிருந்தன. முஸ்லிம்கள் மத்தியில் சஜித் பற்றிய தப்பபிப்பிராயங்களை ஏற்படுத்தும் நோக்கிலேயே இந்த செய்தி பகிரப்பட்டுவந்தமை தெரிய வந்துள்ளது. இந்த செய்தியின் உண்மை தன்மையை அறிந்து கொள்வதற்காக பேராசிரியர் மெத்திகாவை தொடர்பு கொண்டு கேட்டபோது தான் ஒருபோதும் சஜித் பிரேமதாசவே சந்தித்ததே இல்லை என அவர் தெரிவித்தார். இந்த பதிவில் பயன்படுத்தப்பட்டிருந்த புகைப்படம் 26.03.2024 ம் திகதியில் தேசிய அடிப்படை ஆய்வு நிறுவனம் நடத்திய ஆராய்ச்சி மாநாட்டில் எடுக்கப்பட்டதாகும். அந்நிறுவனத்தின் உத்தியோகபூர்வ சமூக வலைத்தள பக்கத்தில் இடம் பெற்றிருந்த புகைப்படமே இந்த போலி பதிவுக்கு பயன்படுத்தப்பட்டிருப்பதாக ஐக்கிய மக்கள் சக்தி தரப்பில் கூறப்படுகிறது.

இந்த செய்தியின் உண்மை தன்மை பற்றி மேலும் தேடிப் பார்த்தபோது இச்செய்தி உண்மை இல்லை என கண்டறியப்பட்டுள்ளது. கடந்த காலத்தில் சகல அமைச்சர்கள் தொடர்பாகவும் இவ்வாறான சில போலிச் செய்திகள் சமூக ஊடகங்களில் அடிக்கடி வெளியிடப்பட்டுக் கொண்டிருந்தன. இவ்வாறான செய்திகளை சமூக ஊடகங்களில் வெளியிட்டு மக்களை தவறான வழியில் திசை திருப்புவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியது அவசியம். தேர்தல் காலங்களில் இவ்வாறான போலிச் செய்திகள் அடிக்கடி வெளிவரும் என்பதால் செய்திகளின் உண்மைத்தன்மை பற்றி தீர விசாரித்து முடிவெடுக்க வேண்டியது வாசகர்களின் தலையாய கடமையாக இருக்கிறது.

# ராஜபக்ச குடும்பத்தின் குருநாகல் கோட்டை தேசிய ஐக்கிய முன்னணியால் தகர்ந்தது

## வரலாறு காணாத சனக்கூட்டத்தால் வளாகமே நிரம்பி வழிந்தது





(எஸ்.எம்.எம்.றம்ஸான்)

ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டு தேசிய ஐக்கிய முன்னணி ஜனாதிபதி வேட்பாளர் அனுர குமார திசாநாயக்கவை ஆதரித்து குருநாகலை நகரில் இடம்பெற்ற தேர்தல் பிரச்சார கூட்டத்தில் இதுவரை நடைபெற்ற பிரச்சாரக் கூட்டங்கள் விட அதிகளவிலான ஆதரவாளர்கள் கலந்து கொண்டு ராஜபக்சாக்களின் அழிக்க முடியாத குருநாகல் கோட்டை சரிந்துள்ளது அரசியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அனுர குமார திசாநாயக்க சுகவீனமுற்ற நிலையிலும் இவ் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சனத்திரள் மத்தியில் உரையாற்றினார்.

# கட்சி தாவியோருக்கு அடுத்த பொதுத் தேர்தலில் தீர்ப்பு

## மன்னாரில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் பதியுதீன்



(எம்.ஏ.ஏ.அக்தார்)

மக்களின் ஆணையை மீறி, கட்சியின் கட்டுக்கோப்பை உடைத்துக்கொண்டு, வேறு கட்சிகளில் இணைந்தோரால் எந்தப் பாதிப்பும் ஏற்படாதென அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

மன்னாரில் (10) நடைப்பெற்ற மக்கள் சந்திப்பில் ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவித்த போதே மேற்கண்டவாறு கூறினார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

“எமது கட்சியின் முன்னாள் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் ஒரு சிலரும், தவிசாளர் ஒருவரும் ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்துள்ளனர். கடந்த ஜனாதிபதி தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராகவும் பாராளுமன்றத்தில் மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராகவுமே எமது கட்சி, மக்களின் ஆணையைக் கோரியது. இதனால் சஜித் பிரேமதாசவுக்கு கணிசமான வாக்குகளை எமது கட்சி பெற்றுக்கொடுத்தது.

பாராளுமன்றத்தில் நான்கு எம்.பிக்களைப் பெறுமளவுக்கு எமது கட்சிக்கு மக்களின் ஆணை கிடைத்தது. இந்த ஆணையை மீறி, இந்த எம். பிக்கள் ரணில் விக்ரமசிங்கவுடன் இணைந்துள்ளனர். இவர்களைப் பின்தொடர்ந்து உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் சிலரும் கட்சி மாறிவிட்டனர்.

மக்களின் ஆணைகளை மீறிய இவர்களை மன்னிக்கவே முடியாது. எதிர்வரும் காலங்களில் இவர்களை மீண்டும் எம்முடன் இணைக்கப் போவதில்லை. இவர்கள் சென்றதால் கட்சியின் வளர்ச்சியில் எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை. எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் பத்து எம்.பிக்களைப் பெறுவோம். அந்தளவுக்கு மக்களின் ஆர்வம் அதிகரித்துள்ளது.

கோட்டாவின் சகாக்களைப் பாதுகாக்கவே இவர்கள் ரணிலுடன் இணைந்துள்ளனர். கடந்தகால ஊழல்வாதிகளும் அமைச்சர்களும் தங்களைப் பாதுகாப்பதற்கே, ரணிலை வெல்லவைக்கப் பார்க்கின்றனர். சஜித் பிரேமதாசவின் ஆட்சியில் ஊழல்வாதிகள் தண்டிக்கப்படுவர்.

ரணில் விக்ரமசிங்கவும் அனுரகுமார திஸாநாயக்கவும் இரவில் இரகசியமாக பேசிக்கொள்கின்றனர். வெவ்வேறாகப் போட்டியிடுவோர் ஏன் பேச வேண்டும்? வெற்றியைத் தக்கவைப்பதற்கான வழிகளையே இவ்விருவரும் ஆராய்கின்றனர். அனுர ஆட்சிக்கு வந்தால், ஆறு மாதங்களில் மீண்டும் ஜனாதிபதியாகலாமென ரணில் நினைக்கிறார். இவை எதுவும் நடக்காது.

சிங்களப் பகுதிகளில் எந்த எதிர்ப்புக்களும் இன்றி கூட்டங்களில் பங்கேற்கிறேன். ஐ.எஸ்.ஐ.எஸ் என்று எனக்கு வழக்குத் தொடுத்தனர். வாக்களிப்பதற்காக பஸ்களில் மக்களைக்கொண்டு வந்ததாகக் குற்றம் சுமத்தினர். இந்தக் குற்றச்சாட்டுக்களிலிருந்து நீதிமன்றம் என்னை நிரபராதி எனத் தீர்ப்பளித்தது. இதனால்,சிங்கள மக்கள் என்னை நம்புகின்றனர்” என்று கூறினார்.



# “இலங்கை தேசத்தின் எழுச்சிக்கான தேசிய மூலோபாய வேலைத்திட்டத்தினை முன் வைத்துள்ள வித்தியாசமான மனிதர் திலித் ஜயவீர”

**சரோஜன் அதிகாரத்தின் சிறுபான்மை சமூகங்களுக்கான பிரிவின் தலைவர் சட்டத்தரணி. சாத்ஹூல் அமீனுடனான நேர்காணல்!**

இனம் மதம் மொழி கடந்து தேசத்தையும் தேச மக்களையும் நேசிக்கும் ஒரே தலைவராக் மனித பண்பு நிறைந்த மனிதராக திகழ்பவர் தான் சர்வஜன அதிகாரத்தில் ஜனாதிபதி தேர்தலில் வேட்பாளராக களமிறங்கி இருக்கும் திலித் ஜயவீர என தாயக மக்கள் கட்சியின் நிறைவேற்று குழு உறுப்பினரும், அக்கட்சியின் சிறுபான்மை சமூகத்தின் பிரிவுத் தலைவரான சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.டபிள்யூ. சாத்ஹூல் அமீன் தெரிவித்தார். ஜனாதிபதி தேர்தலில் சிந்திக்கத் தூண்டும் ஒரு தலைவராக இருக்கும் திலித் ஜயவீரவின் இலக்கு இலட்சியம் தூர நோக்கு குறித்தும் சர்வஜன அதிகாரத்தின் விரிவான மேலோபாயத் திட்டம் தொடர்பாகவும் தெளிவுபடுத்தும் நேர்காணலிலேயே சட்டத்தரணி சாத்ஹூல் அமீன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

சர்வஜன அதிகாரத்தால் வெளியிடப்பட்டுள்ள தேசிய மூலோ பாயத் திட்டம் குறித்து தெளிவுபடுத்துமாறு எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு அவர் நீண்ட விளக்கங்களை எடுத்துரைத்தார்.

*கேள்வி: சர்வஜன அதிகாரத்தின் ஜனாதிபதி தேர்தல் விஞ்ஞாபனம் தொடர்பில் முதலில் விளக்கம் அளிப்பீர்களா?*

பதில்: முதலில் ஒன்றை கூற விரும்புகிறேன். இது ஒரு விஞ்ஞாபனம் அல்ல. பத்தோடு பதினொன்றாக ஒரு விஞ்ஞாபனத்தை நாம் நாட்டு மக்களுக்கு வழங்க முன் வரவில்லை. இது எமது வேட்பாளரான திலித் ஜயவீரவின் நீண்ட கால இலக்குகளை கொண்டதொரு தேசிய மேலோபாய வேலைத்திட்டமாகும். மேலும் இது ஜனாதிபதி தேர்தலோடு மடித்து வைக்கப்படும் அறிக்கையல்ல. இது நீண்டகால வேலைத்திட்டமாகும். அவரது இலக்கை நோக்கிய பயணம் வித்தியாசமானது.

சுதந்திர நாட்டில் வாழ்வோம் என்ற நம்பிக்கைகளை தொலைத்து நிற்கும் இந்த நேரத்தில் நாட்டுக்காகவும் மக்களுக்காகவும் சிந்தித்த அவர் 10 அடிப்படை உடன்படிக்கைகளை உள்வாங்கி சர்வஜன சாசனத்தை வரைந்தெடுத்தார். அனைத்து இன மக்களையும் உள்வாங்கி நமக்காக நாம் என்ற தாரக மந்திரத்துடன் தனது பணியை ஆரம்பித்தார். அதன் அடிப்படையிலேயே இந்த தேசிய மூலோபாய வேலைத்திட்டத்தினை முன் வைத்துள்ளார். இது தேர்தல் விஞ்ஞாபனமல்ல் எல்லா காலத்துக்கும் பொருந்தி வரக்கூடிய ஒரு சாசனமாகும்.

*கேள்வி: நாட்டின் மிகப்பெரிய தேர்தல் ஒன்று நடைபெறப் போகும் இன்றைய சூழ்நிலையில் இவ்வாறான ஒரு வேலை திட்டத்தை முன் வைத்திருப்பது தேர்தலை நோக்கமாகக் கொண்டதா?*

பதில்: கேள்வி நியாயமானது தான். ஆனால் அதுதான் முற்றுமுழுதான நியாயமான இந்த தேசிய வேலை திட்டம் இன்று அவரது மனதில் உருவானதல்ல. தனது பல்கலைக்கழக படிப்புக் காலத்தில் உதித்ததாகும். இதை நான் நன்கு அறிவேன். அவர் பல்கலைக்கழகத்தில் பட்டப் படிப்பை மேற்கொண்ட போது அவரது சக தோழனாக நெருங்கி செயல்பட முடிந்தது. அந்த இளம்பருவத்திலேயே அவருடைய உள்ளத்தில் புரையோடி போன விடயங்களே இவை.

தேர்தலில் வெற்றி தோல்விக்கு அப்பால் நாட்டையும் மக்களையும் பற்றிய சிந்தனையின் வெளிப்பாடு இந்த தேசிய மேலோபாயத்திட்டமாகும். தேர்தலுக்குப் பின்னரும் இந்த வேலை திட்டத்தை முன்னெடுத்து செல்வதில் அவரும் அவரது அணியும் உறுதி பூண்டிருக்கின்றனர். ஒன்றுபட்ட நாட்டை நோக்கி அணிவகுத்து நிற்பதற்கான நம்பிக்கையை வளர்த்து மக்கள் மனங்களை உயிர்ப்பிக்கும் பொறுப்பை தன்னுள்ளத்தில் பதித்துக் கொண்டே இப் பயணத்தை அவர் தொடங்கியுள்ளார்.



*கேள்வி: திலித்தின் இந்த இலட்சியம் மிக்க சவால் மிக்கது என்பதை உணரவில்லையா?*

பதில்: சவால்களை கண்டு அஞ்சும் ஒருவராக எம்மால் அவரை பார்க்க முடியாது. அவருக்கு சவால் என்பது புதிதல்ல. எந்த சவாலையும் எதிர்கொண்டு வெற்றிப் படிகளில் ஏறி வருபவர். ஆக்கபூர்வமான சிந்தனைகளுக்குள் தன்னை ஆட்படுத்தி கொண்டவர். ஒரு படைப்பாற்றல் கொண்ட சிந்தனையாளராகவே அவரை எம்மால் பார்க்க முடிகிறது. அவர் ஏறி வந்த படிக்கட்டுகள் ஒன்றல்ல் இரண்டல்ல் அவற்றை தாண்டி படியேறும் மன உறுதியை அவரிடம் காண முடிகிறது.

57 வது வயதில் பயணித்துக் கொண்டிருக்கும் அவர் தன்னால் முடியும் என்ற மன உறுதி கொண்டவராகவே இந்த பயணத்தை ஆரம்பித்திருக்கிறார். இலங்கையின் மிகப்பெரிய தொழிலதிபராவும் அறிவார்ந்த சிந்தனையாளராகவும் அவர் காணப்படுகிறார். தான் முன் வைத்த காலை வெற்றி இலக்கை அடையும் வரை பின் வைக்காத ஒருவராகவே அவரை பார்க்க முடிகிறது அவசரப்படாத கனத்த இதயம் கொண்டவர் அதே சமயம் இனிய மனதை கொண்டவரும் கூட என்பதை சொல்லி வைக்க வேண்டும்.

*கேள்வி: சிறுபான்மை சமூகங்களின் அரசியல் எதிர்காலம் குறித்த சர்வஜன அதிகாரத்தின் நிலைப்பாடு எவ்வாறானது?*

பதில்: சர்வஜன அதிகாரம் என்ற பெயரை எடுத்துக் கொண்டாலே அதன் அர்த்தத்தை புரிந்து கொள்ள முடிகிறது. தேசப்பற்றை முன் நிறுத்தி அதன் கோட்பாடுகள் அமைக்கப்பட்டுள்ளது. முக்கியமாக இன மத மொழி வேறுபாடுகளை கடந்து இந்த நாட்டில் வாழும் சகல மக்களையும் ஒன்றிணைத்து நாம் இலங்கையர்கள் என்ற நிலைப்பாட்டையே அது கொண்டிருக்கிறது. இந்த நாடு நம் எல்லோருக்கும் சொந்தமான பூமி. எல்லா இன மக்களும் சம உரிமை பெற்றவர்களாகவே மதிக்கப்பட வேண்டும். அதன் காரணமாகவே சகோதரர் திலித் ஜயவீர தலைமை தாங்கும் கட்சிக்கு தாயாக மக்கள் கட்சி என்ற பெயர் சூட்டப்பட்டுள்ளது. இதனோடு இணைந்துள்ள கட்சியினை ஒன்றுபடுத்த சர்வஜன அதிகார கட்சி என பதிவு செய்துள்ளது.

பெரும்பான்மை சமூகத்திற்கு உள்ள சம அதிகாரம் தமிழ் முஸ்லிம் சமூகத்தவர்களுக்கும் உண்டு.

இங்கு சிங்கள தமிழ் முஸ்லிம் என்ற வேறுபாடு கிடையாது. எல்லோரையும் இணைத்தே நாம் இலங்கையர் என்ற மகுடமிடப்பட்டுள்ளது.

எம்மிடையே பெரும்பான்மை சிறுபான்மை என்ற பேதம் கிடையாது. அவரவர் சமயம் அவரவர் மொழி இன ரீதியிலும் அப்படியே அவரவர் மொழி மதம் அவருக்குரியது. இதில் எந்த வேறுபாடும் கிடையாது. நாம் இலங்கையர்களாக கரம் கொடுத்தால் மட்டுமே நம்மால் தலைநிமிர்த்து வாழ முடியும். சர்வதேசத்துக்கு முன்னுதாரணமாக திகழ முடியும்.

நாம் எல்லோரும் புதிதாக சிந்திக்க வேண்டிய நேரம் இன்று வந்துள்ளது. மகிழ்ச்சி மிக தேசத்தை கட்டி எழுப்புவதற்கு அனைவரும் கடமைப்பட்டுள்ளோம். மகிழ்ச்சிகரமான தேசத்துக்காக அனைவரும் ஒன்றுபட வேண்டும் என்று கோசத்தையே திலித் ஜயவீர முன்வைத்துள்ளார்.

சர்வஜன அதிகாரத்தினால் முன் மொழியப்பட்டுள்ள தேசிய மேலோபாய வேலை திட்டத்தின் மிக முக்கியமான அம்சங்களை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதன் மூலம் மட்டுமே செழிப்பான மகிழ்ச்சிகரமான தேசத்தை கட்டி எழுப்ப முடியும். சகல இன மக்களையும் ஒரே கொடியின் கீழ் அணி திரட்ட முடியும். ஊக்கம் பெற்ற சமுதாயத்தை உருவாக்க முடியும்.

எம்மில் எவரும் எவரிலும் தங்கி வாழ வேண்டிய அவசியமில்லை. எமது கால்களில் மட்டுமே நம்பி எழுந்து நிற்க வேண்டும். இதுதான் சர்வஜன அதிகாரத்தின் இலக்கு் திலித் ஜயவீரவின் தூர நோக்கு என்பதை வலியுறுத்தி கூறுகிறேன்.

**நேர்காணல்:**
**எம்.ஏ.எம்.நிலாம்**



# சிறுபான்மை சமூகத்தின் பாதுகாப்பு ரணில் விக்ரமசிங்க

## முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ஜெமில்

(எம். எப். றியாஸ்)

சிறுபான்மை சமூகத்தின் பாதுகாப்பு, எதிர்கால இருப்பு என்பவற்றை கருத்தில் கொண்டு ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்ரமசிங்கவின் கரங்களை பலப்படுத்த மக்கள் முன்வர வேண்டும் என முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஏ.எம். ஜெமில் தெரிவித்துள்ளார்.

சாய்ந்தமருதிலுள்ள அவரது கட்சிக்காரியாலயத்தில் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்ரமசிங்கவை ஆதரித்து நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர்இவ்வாறு தெரிவித்தார்.



தொடர்ந்தும் அவர் தனது உரையில் கடந்த ஆண்டுகளில் மக்கள் எதிர்கொண்ட நெருக்கடிகளை மறந்து விடக்கூடாது நாடு பொருளாதார ரீதியில் பின்னடைவை சந்தித்திருந்த வேலை நாட்டை பொறுப்பேற்க இங்கு போட்டியிடும் எந்த வேட்பாளர்களும் முன் வரவில்லை ஆனால் தற்போதைய ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்ரமசிங்க தனது அரசியல் அனுபவத்தைக் கொண்டு மக்களுக்காக நாட்டை பொறுப்பேற்றார்.

இன்று இலங்கை மீண்டும் அபிவிருத்தி நோக்கிய பாதையில் பயணிப்பதற்கு ரணில் விக்கிரமசிங்கவே களம் அமைத்துக் கொடுத்தார் என்பதை அனைவரும் நினைத்துப் பார்க்க வேண்டும். சிறுபான்மை மக்களின் இருப்பை நிலைத்திருக்க செய்யக்கூடிய ஒரே தலைவராக ரணில் விக்கிரமசிங்க காணப்படுகிறார்.

எனவே கிழக்கு மாகாணத்தில் உள்ள தமிழ், முஸ்லிம் மக்கள் எதிர்வரும் 21 ஆம் திகதி ஜனாதிபதி தேர்தலை சரியாக பயன்படுத்த வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

# சிவில் அமைப்புக்கள் ஜனாதிபதியுடன் கலந்துரையாடல்






(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

சுயேட்சை ஜனாதிபதி வேட்பாளரும் ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்கவுடனான கலந்துரையால் ஒன்றினை சிவில் சமூக அமைப்பு ஏற்பாடு செய்திருந்தது.

கொள்ளுப்பிட்டியில் உள்ள மெண்டரீனா ஹோட்டலில் அண்மையில் இடம் பெற்ற இக் கலந்துரையாடலில் சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள் அரச மற்றும் தனியார் துறை ஊழியர்கள் புத்தி ஜீவிகள், ஆதரவாளர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

இதன் போது கலந்து கொண்டவர்கள் ஜனாதிபதியிடம் கேட்ட வினாக்களுக்கு விடையளித்து அதற்கான விளக்கங்களையும் வழங்கினார்.

இந்நிகழ்வில் முன்னாள் அமைச்சர் பைசர் முஸ்தபா, பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எச். எம்.பௌசி, முன்னாள் ஆளுநர் அசாத் சாலி உள்ளிட்டோரும் கலந்து கொண்டிருந்தனர்.



இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வருண லியனகே மற்றும் குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜே.சி.அலவத்துவல ஆகியோரின் ஏற்பாட்டில் ஐக்கிய மக்கள் சக்தியின் இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரண மாநாடு பத்தரமுல்லையில் உள்ள Cinnamon Lakeside இல் நடைபெற்றது. இந்த நிகழ்வில் இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் துறையின் முக்கியஸ்தர்களும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவும் கலந்துகொண்டனர். இரத்தினக்கல் மற்றும் ஆபரண தொழிற்துறையின் இயங்கும் இரத்தினபுரி கொழும்பு மற்றும் பேருவளை இரத்தினக்கல் சங்கத்தின் உறுப்பினர்கள் அனைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவுடன் கைகோர்த்து இரத்தினக்கல் மற்றும் ஆபரணதுறையின் முன்னேற்றத்திற்காக பல தீர்மானங்களை எட்டுவதில் இணக்கம் கண்டனர். (பி.எம். முக்தார்)

# பரீட்சை நேரத்தில் பேரணிகளை தவிர்க்கவும்

## ஆணையாளர் வேண்டுகோள்

(ஐ. ஏ. காதிர் கான்)

“எதிர்வரும் 15 ஆம் திகதி தேர்தல் பேரணிகளை நடத்த வேண்டாம்” என, பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

தரம் 5 ஆம் ஆண்டுக்கான புலமைப் பரிசில் பரீட்சை, எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள நிலையில், காலை 9.30 மணி தொடக்கம் மதியம் 12.15 மணி வரை நடைபெறவுள்ளது.

“அதனால், குறித்த பரீட்சை நேரத்தில் பரீட்சை நிலையங்களுக்கு அருகில் கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் மற்றும் தேர்தல் பேரணிகளை நடத்த வேண்டாம்” எனவும், ”ஒலிபெருக்கிகளைப் பயன்படுத்துவதைத் தவிர்க்குமாறும்”, அனைத்து ஜனாதிபதி வேட்பாளர்கள் மற்றும் ஆதரவாளர்களிடமும், பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக, பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளதாகவும், பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

# சஜீதை ஆதரித்து மீராவோடையில் மகளிர் மாநாடு



எதிர்வரும் ஜனாதிபதித்தேர்தலில் போட்டியிடும் ஐக்கிய மக்கள் வேட்பாளர் சஜித் பிரேமதாசவை ஆதரித்து மீராவோடை அமீர் அலி கேட்போர் கூடத்தில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் மகளிர் மாநாடு இடம்பெற்றது.

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் திருமதி நபீர் தலைமையில் இடம்பெற்ற இம்மாநாட்டில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தேசியத் தலைவரும் முன்னாள் அமைச்சருமான றிசாட் பதியுதீன், அக்கட்சியின் தவிசாளரும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான எம்.எஸ்.எஸ் அமீர் அலி ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஏனைய அதிதிகளாக முன்னாள் தவிசாளர் கே.பி.எஸ்.ஹமீட், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் ஏ.ஜி.அமீர், கிழக்கின் கேடயம் அமைப்பின் தலைவர் எம்.எஸ்.சபீஸ், முன்னாள் இராஜாங்க அமைச்சரின் பிரத்தியேகச் செயலாளர் எம்.எஸ். எம்.நிஸ்மின் மற்றும் பள்ளிவாயல், பொது நிறுவனங்கள், சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள், கட்சி ஆதரவாளர்கள், மகளிர் அமைப்பின் அங்கத்தவர்கள் எனப்பலர் கலந்து கொண்ட நிகழ்வில் பெருந்திரளான மகளிர் கலந்து கொண்டு தங்களது ஆதரவினை சஜித் பிரேமதாஸவுக்கு தெரிவித்திருந்தனர்.

# கொழும்பு பெரிய பள்ளியில் பொலிஸ் திணைக்களத்தின் 158வது நிகழ்வு





(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

1866ஆம் ஆண்டு நிறுவப்பட்ட இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் 158வது வருட நிகழ்வு கொண்டாடப்பட்டது.

இந்த வகையில் இஸ்லாமிய சமய நிகழ்வு ஒன்று டாம் வீதி பொலிஸ் நிலையத்தின் பங்கேற்புடன் கொழும்பு பெரிய பள்ளிவாசலில் பள்ளிவாசலின் தலைவர் தாஹிர் ரசீன் தலைமையில் அண்மையில் (03) இடம் பெற்றது.

பெரிய பள்ளிவாசலின் மௌலவி அப்துல் ஹாபிலின் கிராஅத்துடன் நிகழ்வு ஆரம்பமானது. வரவேற்புரையை பள்ளிவாசலின் தலைவர் தாஹிர் ரசீன் வழங்கினார்.

பொலிஸ் திணைக்களத்தின் 158வது ஆண்டு நிறைவு தொடர்பான உரையை பிரதம அதிதியான டாம் வீதி பொலிஸ் நிலையத்தின் பிரதான பொலிஸ் பொறுப்பதிகாரி அஜித் பேதுரு ஆராட்சி வழங்கினார்.

விசேட துஆப் பிரார்த்தனையை பள்ளிவாசலின் பிரதம இமாம் மௌலவி றிஸ்வான் வழங்கினார்.

கொழும்பு பெரிய பள்ளிவாசலின் அரபுக் கல்லூரி மாணவன் ஹாமிதின் கிராஅத்தும் இடம் பெற்றது.

# சஜித் பிரேமதாஸ 50 வீதத்திற்கும் அதிகமான வாக்குகளைப் பெறுவார்



(பீ.எம். முக்தார்)

ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய மக்கள் கூட்டணி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ 50வீ வீதத்திற்கும் அதிகமான வாக்குகளைப் பெற்று நிச்சயம் ஜனாதிபதி கதிரையில் அமர்வார் என பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் தெரிவித்தார்.

களுத்துறை மாவட்டத்தில் உள்ள அகலவத்த தொகுதியில், நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் உரையாற்றும் போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

ஐக்கிய மக்கள் சக்தி அமைப்பாளர் ஜகத் பின்னவிதான தலைமையில் நடைபெற்ற இக்கூட்டங்களில் அவர் மேலும் கூறியதாவது,

ஜனாதிபதி தேர்தலில் 39 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். இவர்களுள் ஸஜித் பிரேமதாஸ முதல் நிலையில் உள்ளார். மூவின மக்களின் பேராதரவுடன் வெற்றி பெற்று ஜனாதிபதி கதிரையில் அமர்வார்.

நாட்டு மக்கள் 21 ம் திகதி சிறந்த முடிவை எடுக்க வேண்டும். நாம் எடுக்கும் முடிவு இந்த நாட்டினதும், எதிர் காலச் சந்ததியினருக்குமான முடிவாகும். தவறான முடிவை எடுத்து பின்னர் கவலை படக்கூடாது. கடந்த தேர்தல்களில் தவறான முடிவை எடுத்ததால் நாடு அதல பாதாளத்திற்கு சென்றது. தலைவர்கள் நாட்டை விட்டே ஓடினார்கள். நாம் ஒரு முக்கியமான தருணத்தில் உள்ளோம். நாம் விவேகமாக சிந்தித்து புத்திசாலித்தனமான முடிவை எடுக்காவிட்டால் நாடு பின்னடைவை எதிர் கொள்ளும்.

நாட்டையும், மக்களையும் காப்பாற்றி நாட்டை கட்டியெழுப்பக் கூடிய சிறந்த தலைவர் ஸஜித் பிரேமதாஸவே. வறுமையின் விளிம்பில் வாழ்வோர் மத்தியில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தகா கூடிய தலைவர் ஸஜித் பிரேமதாஸ மட்டுமே என்பதை கவனத்தில் கொண்டு அவரின் வெற்றிக்கு வாக்களியுங்கள்.

சகல சமூகங்களையும் அரவணைத்து நாட்டை துரிதமாகக் கட்டியெழுப்பக் கூடிய தலைவர் ஸஜித் பிரேமதாஸ மட்டுமே என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள்.

களுத்துறை மாவட்ட மக்கள் ஜனாதிபதி தேர்தலில் ஓரணியில் கைகோர்த்து ஐக்கிய மக்கள் கூட்டணி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவின் வெற்றிக்காக வாக்களிக்க வேண்டும்.

வெற்றி பெற முடியாத வேட்பாளர்களுக்கு வாக்களித்து தமது வாக்குகளை வீணாக்கி விடக் கூடாது. சஜித் பிரேமதாஸவின் வெற்றி உறுதியாகும். இவரின் வெற்றிக்காக நாமும் அணி திரள்வோம்.

# சீனன்கோட்டை பிடவளை ஸாவியாவில் ஸஹீஹுல் புஹாரி பாராயண மஜ்லிஸ்



(அஷ்ரப் ஏ சமத்)

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவை ஆதரித்து கொழும்பு 2 ஸ்டுவர்ட் பிளேசில் கூட்டமொன்று நடைபெற்றது. இக் கூட்டம் மேல் மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் முஸ்லிம் காங்கிரஸ் அர்சத் நிசாமுதீன் தலைமையில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் ரவுப் ஹசீர்,மற்றும் எதிர்க்கட்சித் தலைவரின் கூட்டிணைப்பு செயலாளர் மற்றும் பலரும் உரையாற்றினார்கள்.

இங்கு உரையாற்றிய மேல்மாகாண சபை உறுப்பிணர் அர்சத் நிசாமுத்தீன்,

இக்கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பிரதேசத்தில் ஸ்டுவர்ட் தொடர் மாடிக் கட்டிடம் உடைந்து பல ஆண்டுகளாக பாழடைந்து காட்சியளிக்கின்றது. இருந்தும் சில ஏழை மக்கள் தமது இருப்பிடத்திற்கு இப் பாழடைந்த அபாய நிலையில் இத் திட்டத்தில் வாழ்ந்து வருகின்றனர் இவ் விடயம் சம்பந்தமாக பல அமைச்சர்கள் அரசியல்வாதிகள் பேசியும் எவ்வித பலனும் கிடைக்கவில்லை . இவ் வீட்டுத் திட்டத்தின் கூட மறைந்த ஜனாதிபதி ஆர் பிரேமதாச அவர்கள் இப்பிரதேச மக்களுக்கு நிர்மாணித்துக் கொடுத்தார். அதன் பிறகு இப்பிரதேச வாழ் மக்களின் காணிகள் சொத்துக்களை வீடமைப்புக்காக அரச உடைமையாக்கப்பட்ட இதுவரை வீடமைப்புத் திட்டங்கள் இங்கு நிர்மாணிக்கப்பட வில்லை.சட்டவிரோத குடியிருப்பு என காணிகளை சுவிகரித்தார்கள். ஆகவே தான் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அவர்கள் ஆதரவலிப்பதன் மூலம் கொழும்பு நகரில் வாழும் மக்களது வீட்டுத் திட்டம், பாடசாலை அனுமதிக்கான பாடசாலைகளை அபிவிருத்திகளை செய்ய முடியும் என்று முன்னாள் மேல் மாகாண சபை உறுப்பிணர் அர்சத் நிஜாமுதீன் அங்கு தெரிவித்தார்.

# முஸ்லிம் ஜேர்மன் ஹெல்ப்பர் நிறுவன உதவிப் பொருட்கள் வறிய மக்களிடம் கையளிப்பு







(இக்பால் அலி)

கண்டி சித்திலெப்பை பாடசாலையில் கல்வி பயிலும் வறிய மாணவர்களின் போசாக்கு உணவை மேம்படுத்தும் வகையில் ஜெர்மனிய முஸ்லிம் ஹெல்பனின் நிவாரண உதவிகள்

ஹசன் மௌலவி நற்பணி மன்றத்தின் அசிசியாா பவுண்டேசன் ஏற்பாட்டில் முஸ்லிம் ஜெர்மனி ஹெல்ப் அன் நிதி உதவியுடன கண்டி நகரப் பிரதேசத்தில் உள்ள வறிய 200 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருட்கள் கண்டி சித்திலெப்பை பாடசாலையில் அதிபர் ஹலீம் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அசிசியா பவுண்டேசன் பணிப்பாளர் சாதிக் ஹசன் கலந்து கொண்டு வழங்கி வைத்தார்.

நிவாரண பொதியினில் அரிசி மா ஆகிய பொருட்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இதில் 10 கிலோ அரிசி மற்றும் 10 கிலோ கோதுமை மா உள்ளிட்ட பொருட்களாகும்

அசிசா பவுண்டேசன் ஊடாக முஸ்லிம் ஜெர்மன் ஹெல்ப்பர் நிறுவனம் பல்வேறு நிவாரண உதவிகளை நாடளவாரீதியில் வழங்கி வருகின்றன.

அனர்த்த நிலைமையின் போதும் பல்வேறு இடங்களில் தங்களின் நிவாரணப் பணிகளில் கைகோர்த்துள்ளது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

தற்போதைய சூழ்நிலையில் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் 200 குடும்பங்கள் கண்டி பகுதியில் பயன்பெற நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

பொருளாதார கஷ்டங்களுக்கு மத்தியில் வாழும் குடும்பங்களின் குடும்ப சுமையை போக்கும் நோக்கில் உலர் உணவுப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன.

# பரிதி வட்டம் எறிதல் தேசிய மட்டத்திற்கு தெரிவாகி காத்தான்குடி மாணவன் சாதனை



(எம்.பஹத் ஜுனைட்)

மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் நடைபெற்ற மாகாண மட்ட விளையாட்டு போட்டியில் காத்தான்குடி மத்திய கல்லூரி மாணவன் எம். எப்.அதீப் அஹமட் ரு - 20 பரிதி வட்டம் எறிதல் பிரிவில் மாகாண மட்டத்தில் முதலாமிட அடைவாக காணப்பட்ட 35.52 மீட்டர் தூ ரத்தை முறியடித்து 36.41 மீட்டர் தூரம் பரிதி வட்டத்தை எறிந்து மாகாண ரீதியில் முதலிடத்தை பெற்று தேசிய மட்ட போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இம் மாணவனை வாழ்த்தி வரவேற்கும் நிகழ்வு இன்று பாடசாலை அதிபர் எம்.ஏ.நிஹால் அஹமட் தலைமையில் பாடசாலையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பாடசாலையின் பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள், ஆசிரியர்கள்,மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டிருந்ததுடன்

பாடசாலையின் '88 O/L '91 A/L பழைய மாணவர்களின் பங்களிப்பு விளையாட்டு துறையை மேம்படுத்துவதில் காத்திரமானதாகும்.





எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் சுயேட்சை வேட்பாளராக போட்டியிடும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து அனுராதபுரம் மேற்கு தேர்தல் தொகுதியில் கம்பிரிகஸ்வெவயில் அண்மையில் இடம்பெற்ற கூட்டத்தின் போது அனுராதபுரம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான எஸ்.எம்.சந்திரசேன, இஷாக் ரஹ்மான் முன்னாள் புராளுமன்ற உறுப்பினர் பீ.ஹரிசன் மற்றும் கம்பிரிகஸ்வெவ வட்டார முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் இஸ்மாயில் அஷ்ரப் ஆகியோர் உரையாற்றுவதையும் கலந்து கொண்ட மக்களில் ஒரு பகுதியினரையும் படத்தில் காணலாம். (எம்.ரீ.ஆரிப்)

# அகில இலங்கை கலாச்சாரப் போட்டியில் மாவனல்லை மாணவிக்கு முதலிடம்



(பாரா தாஹீர்)

அகில இலங்கை ரீதியாக கல்வி அமைச்சினால் நடாத்தப்பட்ட, பாடசாலைகளுக்கிடையிலான முஸ்லிம் கலாச்சார "நஷீத்" போட்டியில் மாவனல்லை ஸாஹிராக் கல்லூரி மாணவி எம்.எம். எம். ஜமீலா தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்று தனக்குரிய சான்றிதழைப் பெற்றுக் கொண்டார்.

இவர் வலய மட்டத்திலும்,மாவட்ட, மாகாண மட்டங்களிலும் போட்டியிட்டு முதலிடங்களைப் பெற்றதோடு,தேசிய மட்டத்திலும் முதலிடத்தைப் பெற்று,கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளார். இவரை பாடசாலை அதிபர்,ஆசிரியர்கள்,பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள்,நலன் விரும்பிகள் என அனைவரும் பாராட்டுகின்றனர்.

# உக்குவளையில் மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

உக்குவளை வரக்காமுற, அந்நூர், அஜ்மீர், குரீவெல ஹமீதியா ஆகிய பாடசாலைகளில் உயர்தரம் சித்தியெய்து அவர்களுள் பல்கலைகழக தகுதிபெற்றிருக்கும் மாணவர், மாணவியர்களைப் பாராட்டி சான்றுகள் வழங்கும் நிகழ்வு விரைவில் உக்குவளையில் நடைபெறவுள்ளது.

உக்குவளை மாருகொன வாசிப்போர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் முக்கிய பிரமுகர்கள் பலரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

நிகழ்வின் இறுதியில் மாணவர்களது திறமைகளை வெளிக்கொனரும் வகையிலமைந்த "வனொலி திறமைக்கு ஒரு களம்" எனும் குரல் வழி ஒலிப்பதிவு நிகழ்ச்சியும் மாணவர்களது சித்திரக் கண்காட்சி ஒன்றும் இடம்பெறவுள்ளது.

இதுகுறித்த தொடர்புகளுக்கு: வானொலி திறமைக்கு ஒரு களம் வாசிப்போர் ஒன்றியம் , இல: 26/ சீ, மாருகொன, உக்குவளை.

# அமானா வங்கியின் கடன் தரப்படுத்தல் ஃபிட்ச் இனால் BBB-(lka) முதலீட்டு தரமாக உயர்த்தப்பட்டுள்ளது

**- வளர்ச்சி மற்றும் விரிவாக்கத்துக்கான பல்வேறு வாய்ப்புகளை ஏற்படுத்தியுள்ளது -**

2024 ஆகஸ்ட் மாதம் முன்னெடுக்கப்பட்ட பிந்திய தரப்படுத்தல் மீளாய்வில், பிட்ச் ஸ்ரீ லங்காவினால், அமானா வங்கியின் தேசிய நீண்ட கால கடன் தரப்படுத்தலை BB+(lka) இலிருந்து உறுதியான தோற்றப்பாட்டுடன் BBB-(lka) எனும் முதலீட்டு தரத்துக்கு உயர்த்தியுள்ளது.

ஃபிட்ச் ரேட்டிங்ஸ் வெளியிட்டிருந்த அறிக்கையின் பிரகாரம், இந்த தரப்படுத்தல் மெருகேற்றத்தினூடாக, அமானா வங்கியின் நிதிசார் கோவை சிறந்த முன்னேற்றங்களை பதிவு செய்துள்ளதுடன், அதன் போட்டியாளர்களுடன் ஒப்பிடுகையில் சிறந்த தரப்படுத்தலை கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அமானா வங்கியின் தொழிற்படு இலாபம் / இடர் சேர்க்கப்பட்ட சொத்துகள் விகிதம் (நான்கு ஆண்டு சராசரி 2%, 1H24: 2.9%) முன்னேற்றம் கண்டிருந்ததுடன், தொழிற்படு சூழல் சவால்கள் நிறைந்ததாக அமைந்திருந்ததுடன், ஆரோக்கியமான நிகர நிதியளிப்பு எல்லைகள், அந்நியச் செலாவணி வியாபாரம் (நான்காண்டு சராசரி தொழிற்படு இலாபத்தின் 38மூ ஆக அமைந்திருந்தது) அளவான வர்த்தக வருமதியை பதிவு செய்திருந்ததுடன், குறைந்தளவு கடன் செலவுகளையும் கொண்டிருந்தது. இந்த முன்னேற்றகரமான இலாபகரத்தன்மை நடுத்தர கால அளவில் பதிவாகியிருக்கும் என்பதுடன், வங்கியின் முற்பண புத்தகங்கள் அதிகளவு விளைவுகளை வழங்கும் சிறிய நடுத்தரளவு தொழில் முயற்சியாண்மைகள் மற்றும் சில்லறை பிரிவுகளில் திருப்பத்தை ஏற்படுத்தும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

வங்கியினால் அண்மையில் கொழும்பு பங்குப் பரிவர்த்தனை இணையத்தளத்தில் வெளியிடப்பட்ட 'Investor Connect' வீடியோ, கடந்த தசாப்த காலப்பகுதியில் அதன் சொத்துக்களின் உறுதியான வளர்ச்சியை வெளிப்படுத்தியிருந்தது. 2013 ஆம் ஆண்டில் ரூ. 23 பில்லியனிலிருந்து, 2024 இரண்டாம் காலாண்டில் மொத்த சொத்துக்களின் எண்ணிக்கை ரூ. 174 பில்லியனாக உயர்ந்துள்ளது. இதனூடாக வருடாந்த வளர்ச்சி வீதம் (CAGR) 22% ஆக அமைந்துள்ளது. தொழிற்துறையின் சராசரியை பெருமளவு விஞ்சி காணப்படுகின்றது. வங்கியின் வரிக்கு முந்திய இலாபத்தில் இந்த வளர்ச்சி பிரதிபலிக்கப்பட்டுள்ளதுடன், 2013 இல் மறை ரூ. 438 மில்லியனிலிருந்து, 2023 இல் நேர் ரூ. 2.3 பில்லியனாக உயர்ந்துள்ளது. 2024 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில், வங்கி ரூ. 1.4 பில்லியன் வரிக்கு முந்திய இலாபத்தை பதிவு செய்திருந்தது, இது 68மூ வருடாந்த வளர்ச்சியாகும்.

வங்கி பல்வேறு சந்தர்ப்பங்களில் மூலதனத்தை திரட்டியுள்ளதுடன், சவால்கள் நிறைந்த காலப்பகுதியில் இதனை மேற்கொண்டுள்ளது. அண்மையில் 2023 நவம்பர் மாதத்தில் வங்கி உரிமை பங்கு வழங்கலை முன்னெடுத்திருந்தது. இதற்கு வங்கியின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களிடமிருந்து பெருமளவு ஆதரவு கிடைத்திருந்ததுடன், வங்கியின் மூலதனம் ரூ. 6 பில்லியனால் அதிகரித்து ரூ. 20 பில்லியனை எய்தியிருந்தது.

அமானா வங்கியின் தரப்படுத்தல் தொடர்பில் வங்கியின் தவிசாளர் அஸ்கி அக்பராலி கருத்துத் தெரிவிக்கையில், "முதலீட்டு தர தரப்படுத்தலுக்கான இந்த தர உயர்வு, அமானா வங்கியில் நாம் கட்டியெழுப்பியுள்ள உறுதியான அடித்தளங்களுக்கு சிறந்த ஆதாரமாக அமைந்துள்ளது. இதனூடாக வளர்ச்சி மற்றும் விரிவாக்கம் ஆகியவற்றுக்கு வாய்ப்புகளை தோற்றுவித்துள்ளதுடன், சகல பங்குதாரர்களுக்கும் பயனளிக்கும் வகையில் அமைந்திருக்கும்." என்றார்.

இந்த தரப்படுத்தல் உயர்வு தொடர்பில் அமானா வங்கியின் முகாமைத்துவ பணிப்பாளர்ஃபிரதம நிறைவேற்று அதிகாரி மொஹமட் அஸ்மீர் கருத்துத் தெரிவிக்கையில், "பிந்திய ஃபிட்ச் மீளாய்வில் முதலீட்டு தர தரப்படுத்தலை நாம் பெற்றுள்ளதையிட்டு பெருமை கொள்கின்றோம். வங்கியின் உறுதித் தன்மை, மீண்டெழுந்திறன் ஆகியவற்றுக்கான சிறந்த எடுத்துக்காட்டாக இது அமைந்துள்ளதுடன், பிரதான குறிகாட்டிகளில் மேம்படுத்தப்பட்ட வினைத்திறனை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது. உறுதியான மூலதன இருப்பு, நிதிப் பெறுபேறு போன்றவற்றுடன், உறுதியான வளர்ச்சியைக் கொண்ட ஐந்தொகை போன்றவற்றுடன் நாம் துரித வளர்ச்சியையும் விரிவாக்கத்தையும் எய்த தயாராகியுள்ளோம். எமது நிதிசார் வெற்றியில் நேர்த்தியான தாக்கத்தை ஏற்படுத்தும். எமது வாடிக்கையாளர்களுக்கும், எமது பங்காளர்களுக்கும், அர்ப்பணிப்பான ஊழியர்கள் என அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்." என்றார்.





இலங்கை மத்திய வங்கியின் அனுமதி பெற்று இயங்கும் நிதிச் சேவைகளை வழங்கும் நிறுவனமாகவும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட நிறுவனமாகவும் அமானா வங்கி பிஎல்சி திகழ்கின்றது. ஜித்தாவை தளமாகக் கொண்டியங்கும் ஐளனுடீ குரூப் பிரதான பங்காளராக திகழ்கின்றது. ஐளனுடீ குரூப் 'யுயுயு' தரப்படுத்தலை தன்வசம் கொண்டுள்ள பல்தேசிய அபிவிருத்தி நிதிச் சேவைகளை வழங்கும் நிறுவனமாக திகழ்வதுடன், 57 நாடுகளில் அங்கத்துவத்தைக் கொண்டுள்ளது. வட்டிசாராத வங்கியியல் மாதிரியை கொண்டுள்ள அமானா வங்கியை, உலகின் உறுதியான 50 இஸ்லாமிய வங்கிகளில் ஒன்றாக தரப்படுத்தப்பட்டிருந்ததுடன், 2023 ஆம் ஆண்டில் 37ஆம் ஸ்தானத்தில் ஏசியன் பாங்கர் தரப்படுத்தி கௌரவித்துள்ளது. அமானா வங்கி எவ்விதமான துணை அல்லது இணை நிறுவனங்கள் எதனையும் கொண்டிருக்கவில்லை என்பதுடன், அநாதரவான சிறுவர்கள் காப்பக அமைப்பான OrphanCare நம்பிக்கை நிதியத்தின் ஸ்தாபக அனுசரணையாளராக தனது ஈடுபாட்டை பேணி வருகின்றது.

# யாருக்கு ஆதரவு; 15 ல் இறுதி முடிவு



## - மாவை சேனாதிராஜா -

ஜனாதிபதி தேர்தல் விஞ்ஞாபனங்களை ஆராய்ந்து எதிர்வரும் 15 ஆம் திகதி அறிக்கை ஒன்றை வெளியிடவுள்ளோம் என தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தலைமையில் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் வைத்திய கலாநிதி ப. சத்தியலிங்கம் அவர்களின் வவுனியா இல்லத்தில் தமிழரசுக் கட்சியின் விசேட குழுக் கூட்டம் இன்று (10) இடம்பெற்றது.

இதன் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் ஏற்கனவே சில தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளது. தேர்தல் விஞ்ஞாபனங்கள் தொடர்பாக ஆராய்வதற்காக ஏற்கனவே 6 பேர் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. இந்த தேர்தலில் எமது மக்கள் எவ்வாறு வாக்களிக்க வேண்டும். என்ன அடிப்படையில வாக்களிக்க வேண்டும். அதற்காக கட்சி ரீதியான கொள்கை, எமது இனப்பிரச்சனை தீர்வு, சமஷ்டி அடிப்படையிலான தீர்வு என்பவற்றுக்கு ஆதரவான அறிக்கையை நாம் எதிர்பார்க்கின்றோம்.

அதனடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்த தேர்தல் அறிக்கை காரணமாக வேட்பாளர் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவு வழங்குவதாக கொள்கை அடிப்படையில் இணக்கம் ஏற்பட்டு அதில் எங்களுக்கும், அவருக்கும் இணக்கம் ஏற்படக் கூடிய விடயங்களை அடையாளப்படுத்தி எதிர்வரும் 14 ஆம் திகதிக்கு முன் அல்லது 15 ஆம் திகதி கூடி ஆராய்ந்து பொது மக்களுக்காக அறிக்கையை வெளியிடவுள்ளோம் எனத் தெரிவித்தார்.

இதன்போது, நீங்கள் ஒரு கட்சியின் உடைய தலைவர். ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவித்து தாங்கள் கருத்து வெளியிட்டு இருந்தீர்கள். ஆனால் கட்சி சஜித் பிரேமதாச அவர்களுக்கு ஆதரவு என அறிவித்துள்ளது. இது பொது மக்களை குழப்பதா என ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பிய போது,

நாங்கள் மாறுபட்ட கருத்துக்களை கூறவில்லை. நான் ஆரம்பத்திலும் கூறிய கருத்து கட்சி கூட்டத்தில் நான் கலந்து கொள்ளவில்லை. அவர்கள் எடுத்த தீர்மானம் என்ன என்ற விளக்கம் எனக்கு தேவைப்பட்டிருந்தது. அப்போது கட்சி முன்வைத்த கருத்தை ஆராய்ந்து அதனை மக்கள் மத்தியில் முன்வைப்போம் எனத் தான் கூறினேன். பத்திரிகை ஒன்று ஏதோ தேடிப் பிடித்து தலைப்புச் செய்தியாக ஒன்றை பிரசுரித்ததைப் பார்த்து நான் மாறுபட்டு சொன்னேன் என கூற முடியாது. இப்பொழுதும் கட்சி எடுத்த முடிவு தொடர்பில் பேசினோம். இறுதி முடிவு தான் முக்கியமானது. இன்றும் அதில் என்ன மாற்றங்கள், திருத்தங்கள் செய்யப்பட வேண்டும் எனவும் கதைத்துள்ளோம். அதற்கு பொருத்தமாக அறிக்கைளை பொது மக்களுக்கு வழங்குவோம். கட்சியின் பலம், மக்களின் பலம் என்பவற்றை ஆராய்ந்து ஜனநாயக ரீதியாக அதனை சரியாக பயன்படுத்த வேண்டும். - என்றார்.

### தீர்வுத்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேலைத்திட்டங்களையும் உருவாக்குவதோடு அரசாங்க சேவைகளை டிஜிட்டல் மயமாக்குவோம் என பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ களுத்துறையில் தெரிவித்தார்.

களுத்துறை வடக்கு புகையிரத நிலையத்திற்கு அருகில் உள்ள விளையாட்டரங்கில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசும் போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

பொதுஜன பெரமுனவின் களுத்துறை தொகுதி புதிய அமைப்பாளர் யொஹான் வடுகே தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் நாமல் ராஜபக்ஷ மேலும் கூறியதாவது,

நாம் சவால்களுக்கு பயந்தவர்கள் அல்ல. எல்.ரி.ரி.ஈ பயங்கரவாத சவால், கொவிட் - 19 சவால்களிலிருந்து நாட்டு மக்களை காப்பாற்றுதல், நாட்டினை அபிவிருத்தி செய்யும் போது எதிர் கொண்ட சவால்களை எல்லாம் வெற்றி கொண்டோம். இந்த தேர்தலிலும் எல்லா சவால்களையும் மிக தைரியமாக எதிர்கொண்டு வெற்றி பெறுவோம். மக்களின் முழுமையான ஆதரவு எமக்கு அவசியம். நம் தாய் நாட்டின் மீது மிகவும் அன்பு கொண்டவர்கள் நாட்டிற்கும், நாட்டு மக்களுக்கும் பாதிப்பு ஏற்பட ஒரு போதும் இடமளிக்க முடியாது.

கொவிட் - 19 காலத்தில் மக்களை பாதுகாத்தோம். மக்கள் உணவின்றி மரணிக்க இடம் வைக்கவில்லை. கொரோனா தடுப்பூசி ஏற்றி மக்களுக்கு பாதுகாப்பு ஏற்படுத்தினோம். கொரோனாவின் போது 5000 ரூபா வீதம் வழங்கி உதவி செய்தோம்.

முதலீடுகளைக் கொண்டு புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்குவோம். அடுத்த பத்தாண்டுகளில் சுற்றுலாத்துறையை மேம்படுத்த திட்டங்களை உருவாக்காவோம்.

களுத்துறையை சுற்றுலா மையமாக உருவாக்குவோம். நாட்டை கட்டியெழுப்பி மக்களுக்கு சிறந்த வாழ்க்கையை ஏற்படுத்த எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் பொதுஜன பெரமுனவை ஆதரியுங்கள்.

பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜனகதிஸ்ஸ குட்டியாரச்சி, பொதுஜன பெரமுன முக்கியஸ்தர்கள் உட்பட பலரும் பேசினர்.

### எதிர்வரும்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள் இன்று நள்ளிரவு முதல் தடை செய்யப்படுவதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பான மாதிரி வினாக்கள் அடங்கிய வினாத்தாள்களை அச்சடித்து விநியோகிப்பதும் தடை செய்யப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு, பரீட்சை வினாத்தாள்களுக்கான வினாக்களை வழங்குவதாகவோ அல்லது அதற்கு சமமான வினாக்கள் வழங்கப்படும் என சுவரொட்டிகள், பதாகைகள், கையேடுகள், மின்னணு, அச்சிடப்பட்ட அல்லது சமூக ஊடகங்களில் வெளியிடுவது முழுமையாக தடை செய்யப்பட்டுள்ளது.

எந்தவொரு நபரோ, நிறுவனமோ அல்லது தரப்பினரோ இந்த உத்தரவை மீறினால் அருகில் உள்ள பொலிஸ் நிலையம், பொலிஸ் தலைமையகம் அல்லது பரீட்சை திணைக்களத்தில் முறைப்பாடு செய்ய முடியும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

2024 ஆம் ஆண்டிற்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை செப்டம்பர் மாதம் 15 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் திரு.அமித் ஜயசுந்தர.

”எதிர்வரும் 15ஆம் திகதி காலை 9.30 மணி முதல் மதியம் 12.15 மணி வரை பரீட்சை நடைபெறும். குறித்த நேரத்தில் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் அனைத்து வேட்பாளர்களும், அனைத்து கட்சிகளும் இந்த தேர்வுக்கு இடையூறு விளைவிக்கும் செயல்களில் ஈடுபட வேண்டாம். குறிப்பாக, குறித்த காலப்பகுதியில் ஒலிபெருக்கிகளைப் பயன்படுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்” என்றார்.